இன்றைய தினம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மின்சார மோட்டார்கள் நீரை இறைத்துக் கொண்டிருக்கிறபோது குறைந்த மின் அழுத்தம் காரணமாக மோட்டார்களின் காயில் போன்ற பாகங்கள் எரிந்து விடுகிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே சங்கராபுரம் ரிஷிவந்தியம் பகுதியில் விரைவாக இந்த ஆண்டே துணை மின் நிலையத்தைத் துவக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுமா, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவினால் விவசாயம் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டிருப்பது என்பது உண்மையாகும். நடப்பாண்டில் நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

(ஓ) பெரம்பலூர் மதனகோபாலசாமி கோயில் நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்.

டாக்டர் க. நல்லமுத்து: தலைவர் அவர்களே, "பெரம்பலூர் அருள்மிகு மதனகோபாலசாமி கோயில் நிலங்கள் விற்கப்படுதல், குறைந்த குத்தகைக்கு விடப்படுதல், கோயிலுக்குச் சொந்தமான வீடுகளுக்கு தனி நபர் வசூல் செய்தல், கோயிலின் சிலை உண்மையானதா ஆகியவை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு மதனகோபாலசாமி திருக்கோவிலுக்கு கீழ்க்கண்டவாறு நிலங்கள் இருந்தன:—

		ஏக்கர்.	செண்டு.
நஞ்சை	..	22	37½
புஞ்சை	..	261	33
கூடுதல்	..	283	70½

இந்த நிலங்களில் 2.24 ஏக்கர் புஞ்சை நிலம் மட்டும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திற்கு இந்துசமய அற நிலைய ஆட்சித்துறை ஆணையர் அனுமதி பெற்று விற்பனை செய்யப்பட்டுள்ளது. மீதி நிலங்கள் அனைத்தும் கீழ்க்கண்ட விவரப்படி குத்தகைக்கு விடப்பட்டுள்ளன:—

	ஏக்கர் செண்ட்.	குத்தகைதாரர்.	குத்தகை விபரம்		
			கலம்.	மரக்கால்	படி
நஞ்சை	$22.37\frac{1}{2}$	28	1,266	5	7
புஞ்சை ..	259.09	112	ரூ. 9,718.45		

2. மேற்படி திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் யாவும் பொது பொறுப்புக் கழகச் சட்டத்தின் கீழ் (Public Trust Act) பதிவு செய்யப்பட்டு குத்தகைதாரர்கள் வசம் உள்ளன. அவர்களை வெளியேற்ற இயலாது. ஆண்டுதோறும், குத்த கைக்கு நிலங்களை மாற்றி மாற்றி விடமுடியாது. தனிப்பட்ட முறையில் நிலங்கள் யாருக்கும் குத்தகைக்கு விடப்படவில்லை. விடவும் முடியாது. குத்தகைதாரர்கள் பாக்கி வைத்தால், வருவாய்த்துறை நீதிமன்றம் (Revenue Court) மூலம் வழக்கு தொடர்ந்து டிகிரி பெற்று நிறைவேற்று மனு மூலம் நிலம் கைப்பற்றிய பிறகே மறு ஏலம் விடமுடியும்.

3. இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான 40 கட்டிடங்களுக்கு நியாய வாடகைக் குழுவினரால் நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகைக்கே விடப்பட்டுள்ளன. இந்த கட்டிடங் களுக்கும் கோவிலுக்குச் சொந்தமான மனைகளுக்கும் வாட கையை திருக்கோவில் பணியாளர்கள் மூலமே வசூல் செய்யப் படுகிறது. தனி நபர்கள் யாரையும் வசூலிக்க ஈடுபடுத்துவதில்லை.

4. மேற்படி கோவிலுக்குச் சொந்தமான நிலங்களில் கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு தமிழ்நாடு அறநிலைய சட்டம் 22/1959 பிரிவு 34ன் கீழ் நிலம் விற்பனைக்கு கேட்டு விற் பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

	ஏ.செ.
1. பெரம்பலூர் தபால் மற்றும் புறநிலைய ஊழியர் சங்கத்திற்கு	5.50
2. பெரம்பலூர் வட்ட கூட்டுறவு சங்கம்	1.07
3. பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய பணியாளர் சங்கம்	3.00
4. பெரம்பலூர் வட்ட அண்ணா கூட்டுறவு சங்கம்	2.00

5. பெரம்பலூர் அஞ்சலக அலுவலகம்	.. ..	1.17
6. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்	..	0.75
7. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்	..	4.40
		17.89

இவைகள் இன்னும் விற்பனை செய்யப்படவில்லை

5. கோவிலில் 16 செப்புத்திருமேனிகள் உள்ளன. இவைகள் உண்மையானவை. மேலும் இவைகள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அன்றாட பூசை நைவேத்தியங்கள் முறையாக நடைபெறுகின்றன. திருமேனிகள் தொல்பொருள் துறையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவைகளுக்கு புகைப்பட ஆல்பமும் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் வெகுவாக உண்மைகள் மறைக்கப்பட்டு இருக்கின்றன. உண்மைக்கு நேர் விரோதமான கருத்துக்கள்கூட தரப்பட்டு இருக்கின்றன. அங்கே, பெரம்பலூர் தபால் மற்றும் புறநிலைய ஊழியர் சங்கம், பெரம்பலூர் வட்ட கூட்டுறவுச் சங்கம், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியப் பணியாளர் சங்கம், பெரம்பலூர் வட்ட அண்ணா கூட்டுறவுச் சங்கம் என்ற பெயர்களில், ஒரு பெரும் புள்ளியினுடைய பின்னணியில் சுயநலக் கும்பல் ஒன்று, சங்கம் என்ற பெயராலேயும், தனிப்பட்ட முறையிலேயும், கோயில் நிலங்களையும், கோயிலின் இதரச் சொத்துக்களையும், அபகரிப்பதற்காக ஒரு திட்டம் வகுத்து அந்தச் சொத்துக்களை அபகரிப்பதற்கு முயற்சிப்பதாக நான் கேள்விப்பட்டுதான், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கையை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள செய்திகளில் இருந்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில விவரங்களைத் தந்தார்கள். இன்னும் நிலம் விற்கப்படவில்லை. உண்மையிலேயே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், பினாமி, அதன் பின்புறம் ஒரு தனி மனிதர் இருக்கிறார் என்று சொன்னால், அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால், அதை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் க. நல்லமுத்து : தலைவர் அவர்களே, அருள்மிகு மதனகோபாலசாமி கோயிலில் இருக்கிற அந்தக் கடவுளே உண்மையான கடவுள் இல்லை என்ற நிலை மக்கள் மத்தியில் நிலவி வருகிறது. ஆகவே இதைப்பற்றி விசாரணை செய்து, ஒரு முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்படி தவறான தகவல்களைத் தரவேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன். கோவிலில் 16 செப்புத் திருமேனிகள் உள்ளன. அவைகள் உண்மையானவை. அவைகள் அத்தனையும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அன்றாடபூஜை, நைவேத்தியங்கள் நடைபெறு கின்றன. திருமேனிகள் பற்றித் தொல்பொருள் துறையில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இவைகளுக்கு புகைப்பட ஆல்பமும் தயார் செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தொகுதி மக்களுக்கு இதை நம்பும்படியாகச் சொல்லவேண்டும்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கஙுங்கக்குப் பயன் படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு, சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகார மளிப்பு) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சட்ட முன்வடிவை பரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

௭

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண். 24/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் ''.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் பேசுகின்றபோது, மக்களிடையே காவல்துறையானது, மக்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையைக் கொடுக்கக்கூடிய ஒரு